# பல்லுயிர்ப் பேணுதலில் சமய இலக்கியங்களின் பங்கு

## The Role of Religious Literature in Bio-diversity Conservation




பதிப்பாசிரியர்கள்

முனைவர் ஆ.நிர்மலா

மா.மாணிக்கம்

சு.தீபலட்சுமி


1

14. வ.குணபாலசிங்கம்,
மட்டக்களப்பு நாட்டார்வழிபாட்டு இலக்கியங்கள் காட்டும் பல்லுயிர்ப் பேணுதல் (சடங்குப் பாடல்களை அடிப்படையாகக் கொண்ட ஆய்வு) 84

15. முனைவர் இரா.குமாரசாமி
நடையியல் நோக்கில் - விடுகதை 90

16. முனைவர் குளோரியா வி.தாஸ்
நோவாவின் பேழையும் பல்லுயிர்ப் பேணலும் 97

17. கௌரி லக்சுமிகாந்தன்
பிராமிக் கல்வெட்டுக்கள் வெளிப்படுத்தும் புராதன கால பயிராக்கலும் நீர்ப்பாசனமும் 102

18. து.கௌரீஸ்வரன்,
கிழக்கிலங்கையின் பத்திச் சடங்குகளும் அவற்றில் பல்லுயிர்பேணுதலும் : ஓர்ஆய்வு 109

19. ம.சக்கரவர்த்தி
உலக உயிர்களை ஓம்புதலில் திருக்குறளின் கோட்பாடுகள் 116

20. க.சக்திமணி
நீலகிரி மாவட்டம் குன்னூர் ஸ்ரீ ராஜயோக ஆசிரம சுவாமிகள் தவத்திரு இராமலிங்க அடிகளார் 123

21. இ.சகாயசீலன்
திருக்குறள் கூறும் அரசும் சமூக நல்லிணக்கமும் - ஓர் ஆய்வு 127

22. வி. சசிகரன்
பல்லுயிர் பேணுவதில் மாரியம்மன் சடங்கின் வகிபங்கு அரசடித்தீவு மாரியம்மன் கோயிலை அடிப்படையாக கொண்ட ஆய்வு 134

23. ப.சசிதரன்
தமிழர் சமயத்தில் பல்லுயிர்ப் பாதுகாப்புப் பதிவுகள் 139

24. முனைவர் ந. சத்தியா
ஆசிய ஜோதியில் பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல் 144

25. சு.சந்திரகுமார்,
கொம்புமுறி விளையாட்டு சடங்குசார்ஆற்றுகையில் பல்லுர்பேணல் வெளிப்பாடு வந்தாறுமூலைப் பிரதேசத்தை மையப்படுத்திய ஆய்வு 149

# பிராமிக் கல்வெட்டுக்கள் வெளிப்படுத்தும் புராதன கால பயிராக்கலும் நீர்ப்பாசனமும்

கௌரி லக்சுமிகாந்தன்
விரிவுரையாளர்,
வரலாற்றுத்துறை கலை கலாசார பீடம்,
கிழக்குப் பல்கலைக்கழகம்,
இலங்கை

கி.மு மூன்றாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் இலங்கையில் பௌத்த சமயம் அறிமுகம் செய்யப்பட்டதன் பின்னர் அந்நெறியை பின்பற்றிய துறவிகளால் குகைத்தளங்கள் பயன்படுத்தப்பட்டு வந்தன. இவற்றில் எழுதப்பட்ட கல்வெட்டுக்களின் முக்கிய நோக்கம் சமூகத்தில் பல மட்டத்தைச்சார்ந்தோரும் பௌத்த சமய நிறுவனங்களுக்கு வழங்கிய நன் கொடைகளை பதிவு செய்வதாகும். எனினும் இப்பதிவுகளுக்கு மத்தியில் சம கால இலங்கைத் தீவின் பயிராக்கல் மற்றும் நீர்ப்பாசனம் பற்றி அறியத்தக்க பல்வேறு தகவல்களும் அடங்கியுள்ளன. அந்த வகையில் ஆய்வின் சுருக்கம் கருதி கிழக்கிலங்கையில் கண்டறியப்பட்டு வெளியிடப்பட்டுள்ள 245 கல்வெட்டுக்கள் மட்டும் இங்கு ஆய்விற்குட்படுத்தப்படுகின்றன.

தமிழகம், இலங்கை முதலான நாடுகளில்; காலத்தால் முந்தையசாசனங்கள் பிராமி (Brahmi) வரிவடிவிலேயே எழுதப்பட்டன. தமிழகத்தில் மட்டும் அது தமிழ் மொழியிலும், ஏனைய இடங்களில் அவை பிராகிருத மொழியில் எழுதப்பட்டமை குறிப்பிடத்தக்கது. பிராமிச் சாசனங்கள் மிகச்சிறியனவாகக் காணப்படுகின்றன. இலங்கையில் இதுவரை இரண்டாயிரத்திற்கு மேற்பட்ட பிராமிக் கல்வெட்டுக்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.இக்கல்வெட்டுக்கள் பிராமி எனப்படும் வரிவடிவத்தில் பிராகிருத மொழியில் பௌத்த துறவிகளுக்கு அல்லது பௌத்த சங்கத்திற்கு அனைத்துப் பிரிவு மக்களும் நன்கொடையாக வழங்கிய குகை, கற்படுக்கை, நிலம், குளம், கால்வாய், தானியம் தொடர்பான செய்திகளைக் கூறுகின்றன (புஸ்பரெட்ணம் 2001).

நீர்ப்பாசனம்: புராதன இலங்கையின் முக்கியமான அம்சமாகக் கருதக்கூடியது இந்நாட்டில் வளர்க்கப்பட்ட விவசாய முறையும், நீர்ப்பாசனப் பொறிமுறையுமாகும். இலங்கையின் புராதனகால சமுதாயம் பற்றிக் குறிப்பிட்ட சில அறிஞர்கள் ‘இது ஒரு நீரியல் சமுதாய

(Hydrology Society) 'என்கின்றனர். தென்னாசியாவின் தென்பகுதியில் மிகப் புராதன காலம் முதலாக நீரினைத் தேக்கி சிறுகுளங்களை அமைக்கும் வழக்கம் இருந்தது. ஆரம்ப காலத்தில் குளங்களை அமைத்தமை பற்றிய செய்திகள் நேரடியாக கல்வெட்டுக்களில் குறிப்பிடப்படவில்லையாயினும் பௌத்த மத குருமாருக்கு நீர்பாசனத்துடன் தொடர்புடைய குளங்கள், கால்வாய், அவற்றின் மூலமாகக் கிடைக்கின்ற வருமானம் முதலானவற்றை ஆட்சியாளர்கள் வழங்கியமை பற்றி பிராமிக் கல்வெட்டுக் குறிப்புகள் காணப்படுகின்றன. அவற்றினூடாக அக்கால சமூகத்தில் நீர்ப்பாசன நிலைமை தொடர்பாக கண்டறிய முடிகின்றது. விகாரைகளில் வாழ்ந்த துறவிகளின் அன்றாட தேவைக்கும், சுகபோக வாழ்க்கைக்கும் வேண்டிய நீரை குளிப்பறைகளுக்கும், தடாகங்களுக்கும், மலர் வனங்களுக்கும் அனுப்புவதற்கு நீரேந்து கால்வாய்கள் பயன்படுத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

குளங்கள் கிராமங்களின் உயிர் நாடியாகக் காணப்பட்டன. கிராமவாசிகள் தங்கள் அன்றாடத் தேவைக்கும் பயிர்ச்செய்கைக்கும் வேண்டிய நீரைச் சேமிப்பதற்குக் குளங்களை அமைத்தனர். கோடை காலங்களில் சுனைகளும், சிற்றாறுகளும் வற்றி நீர்ப்பற்றாக்குறை ஏற்படுவது வழக்கம். இத்தகைய காலங்களில் நீர்த் தேவையை பூர்த்தி செய்வதற்காக குளங்கள் அமைக்கப்பட்டன. கிராம மக்களே ஆரம்பத்தில் இதனை முன்னெடுத்தனர். காலத்திற்கு காலம் இவர்களாலேயே குளங்களின் அணைக்கட்டுக்கள் புனரமைக்கப்படும். எனினும் சாதாரண மக்களின் இந்நடவடிக்கைகள் பதிவு செய்யப்படும் நடைமுறை காணப்படாமையினால் அவை தொடர்பான செய்திகளை அதிகளவில் அறிந்து கொள்ள முடியாதுள்ளது.

பொதுவாக குளங்களின் அமைப்பு மற்றும் அளவினை அடிப்படையாகக் கொண்டு சிறிய குளங்கள், நடுத்தர குளங்கள், பெரிய குளங்கள் என பாகுபடுத்தலாம். அந்தவகையில் பிராமிக் கல்வெட்டுக்களின் ஆரம்ப காலத்தில் அமைக்கப்பட்ட குளங்கள் மிகச் சிறியவையாகவே காணப்பட்டன. பொதுவாக தனித்தனியாக ஒவ்வொரு கிராமத்தின் நீர்த் தேவையை நிறைவு செய்யும் அளவிற்கு சிறியவையாகக் காணப்பட்டன. குளங்களிலிருந்து கிராமத்தின் எல்லையில் அல்லது சற்றுத் தூரத்தில் அமைந்திருந்த வயல் நிலங்களுக்கு தேவையான நீரினைப் பாய்ச்சுவதற்காக சிறிய நீர்ப்பாசன வாய்க்கால்கள் அமைக்கப்பட்டன. அத்தகைய வாய்க்கால் ஒன்று பற்றி திருகோணமலை நாச்சியார் மலைக் கல்வெட்டுக் குறிப்பிடுகின்றது (I.C.No.379).. ஆரம்ப காலப் பிராமிக் கல்வெட்டுக்களில் இத்தகைய நீர்ப்பாசன நடவடிக்கைகள் மிக அரிதாகக் கூறப்படுகின்ற நிலையில் இக்கல்வெட்டு முக்கியத்துவம் வாய்ந்ததாகும். அம்பகம எனும் ஊரின் 'நசடக' எனும்

பெயருடைய கால்வாய் பற்றி இதில் கூறப்படுகின்றது. இந்த வாய்க்காலானது அம்பகமவின் பயிர்ச்செய்கை நிலங்களுக்கான நீர்த் தேவையை பூர்த்தி செய்வதற்காக அமைக்கப்பட்டிருந்தது. பின்னர் அக்கால்வாய் சங்கத்திற்கு தானமாக வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. கால்வாய் பிராகிருத மொழிக் கல்வெட்டுக்களில் 'அடி' எனக் குறிப்பிடப்படுகின்றது.

காலப்போக்கில் விவசாய குடியிருப்புகளான கிராமங்கள் பலவற்றை உள்ளடக்கிய அரசியல், சமூக அமைப்புக்கள் தோன்றியதும் அவற்றில் தலைமை வகிக்கும் தலைவர் மற்றும் சிற்றரசர்கள் ஆகியோர் அளவில் சற்றுப் பெரிய நீர்த்தேக்கங்களை அமைத்தனர். நீர்பாசனவியலின் மூன்றாம் கட்ட வளர்ச்சி அரசின் முன்னேற்றத்தோடு தொடர்புடையது. இராசதானியிலும் அதைச் சுற்றியுள்ள பகுதிகளிலும் குளங்களை அமைக்க வேண்டிய தேவை ஏற்பட்டது. நீர்வழங்குதல் புண்ணிய கருமமாகக் கருதப்பட்டது. அத்துடன் நீர்ப்பாசனம் மூலமாக மன்னருக்குவருமானமும் கிடைத்தது. இக்காரணங்களினாலே மன்னரில்பலர் பெருங் குளங்களையும், கால்வாய்களையும் அமைத்தனர்.

கிழக்கிலங்கையிலுள்ள பிந்திய கால பிராமிக் கல்வெட்டுக்களில் (கி.பி இரண்டாம், மூன்றாம் நூற்றாண்டு) நீர்ப்பாசன நடவடிக்கைகள் தொடர்பான செய்திகள் அதிகமாகக் காணப்படுகின்றன. ஏறத்தாழ 16 கல்வெட்டுக்களில் குறிப்புள்ளது. பொதுவாக இவை குளம்,கால்வாய், அவற்றிலிருந்து பெறப்பட்ட வரி மூலமான வருமானம்(நீர் வரி)என்பன தானமளிக்கப்பட்டமை பற்றி இக்கல்வெட்டுக்கள் குறிப்பிடுகின்றன.

**அட்டவணை - கிழக்கிலங்கையில் நீர்ப்பாசன நடவடிக்கைகள்**

| தொ.இ | கல்.இல | கல். காணப்படும் இடம் | தானம் | தானமளிக்கப்பட்ட விகாரை |
|---|---|---|---|---|
| 1) | I.C.I 1970:379 | நாச்சியார்மலை | கால்வாய் (நசடக அடி) | சங்கம் |
| 2) | I.C.II 1983:13A | ரஜகல | குளம் | கவிலபி திஸ பவத்த |
| 3) | I.C.II 2001:113B | ரஜகல | நீர் வரி | கு,த்த பவத்த |
| 4) | I.C.II 1983:19 | லைன்மலை | வாய்க்கால் | ஸிபவத |
| 5) | I.C.II 1983:90 | லைன்மலை | குளம் மூலமான நீர் வரி | ஸிபவதயின் போதிகர |
| 6) | I.C.II 1983:30 | வேரோடிய மலை | கால்வாய் | டகபஹ நாக விகாரை |
| 7) | I.C.II 1983:78 | வேள்கம விகார | நீர் வரி | வேள்கம அபயகிரி |
| 8) | I.C.II 1983:79 | நெலுகல | குளம் மூலமான நீர் வரி<br>குளம்<br>கால்வாய் | அஹலி பவத்த |
| 9) | I.C.II 1983:84 | வோவட்டகல | குளம் மூலமான நீர் வரி | - |
| 10) | I.C.II 2001:95 | நெலும்பட்பொகுண | குளம் மூலமான நீர் வரி | கோ,ஸஸக,ல |
| 11) | I.C.II 2001:125 | கலகிதி ஓடை | குளம் மூலமான நீர் வரி | ஹவேரா பவத்த |
| 12) | I.C.II 2001:160 | நீலப்பணிக்கன்மலை | நீர் வரியில் 1/10பங்கு | கலக வஹணக |
| 13) | I.C.II 2001:160B | நீலப்பணிக்கன்மலை | குளம் | கலக வஹணக |
| 14) | I.C.II 2001:171B | கரண்டகல | குளம்<br>குளம் மூலமான நீர்வரி | ஹவுட கல விகாரை |
| 15) | I.C.II 2001:171C | கரண்டகல | குளம் | ஹவுட கல விகாரை |
| 16) | I.C.II 2001:171D | கரண்டகல | குளம் | ஹவுட கல விகாரை |
| 17) | G | பத்தாவெடி | கேணி | சங்கம் |

பொதுவாக நீர்ப்பாசன ரீதியான தானத்தில் குளம், கால்வாய் என்பன அமைக்கப்பட்டோ வாங்கப்பட்டோ தாமாக வழங்கப்பட்டுள்ளன. ரஜகல கல்வெட்டில் கவடுக எனும் பெயருடைய குளம் குடகண்ண காமணி திஸவின் மகன் உபராஜ நாகவால் தானம் அளிக்கப்பட்டுள்ளது. எனினும் இக்குளம் லஜக ராஜவின் தனிப்பட்ட சொத்தாக விளங்கியிருந்தது. ரோகணத்தின் ஆட்சிப் பிரதிநிதியான உபராஜன் அதனை கவிலபி திஸ பவத்த விகாரைக்கு தானமளத்துள்ளான் (Paranavitana 1983:15-16). அமைச்சர் அஸகிரியவின் மகன் அமைச்சர் அஹலய அரஹய நாக அபய எனும் தனிநபரிடமிருந்து மண்ணின் பெறுமதியை வழங்கி குளத்தினை வாங்கி பயக3லக அஹலி பவத்த விகாரைக்கு தானமளித்தமை பற்றி நெலுகல கல்வெட்டில் கூறப்படுகின்ற (Paranavitana 1983:113-117). இவனால் பல்வேறு தானங்கள் வழங்கப்பட்டிருந்தன. ஹரண்டகெலவிலுள்ள கல்வெட்டொன்றில் கவிடததிரி எனும் பெயருடைய குளம் அஸய என்பவனால் வாங்கப்பட்டு ஹவுடாகல மடாலயத்திற்கு தானமளிக்கப்பட்டது (Paranavitana 2001:271). அதே விகாரைக்கு பெண் உபாசகி மத்த தனக்குச் சொந்தமான குளத்தினை வழங்கியுள்ளாள் (Paranavitana 2001:272). இவ்விகாரை காகவண்ண திஸ மகாராஜாவினுடையது என்ற செய்தியும் இக்கல்வெட்டில் உண்டு.

குளங்களிலிருந்து பயிர்ச்செய்கை நிலங்களுக்கும், சங்கத்தாரின்; தனிப்பட்ட தேவைகளுக்கும் தேவையான நீரைக் கொண்டு செல்வதற்கு கால்வாய்கள் அமைக்கப்பட்டிருந்தன. அவை பௌத்த மடாலயங்களுக்கு வழங்;கப்பட்டமை பற்றிய விபரங்கள் கிழக்கில் மூன்று கல்வெட்டுக்களில் காணப்படுகின்றன. லைன்மலையிலுள்ள கல்வெட்டில் த3க்கபுநக, கிரிகமக எனும் இரு வாய்க்கால் ஸிபவத விகாரைக்கு வழங்கப்பட்டன(றியசயயெவையெ 2001:29-30).அதேபோன்றுகி3ரிகஹோதஹி எனும் கால்வாய் த3கபஹ நாக விகாரைக்கு தானமளிக்கப்பட்டமை பற்றி மட்டக்களப்பு -வேரோடிய மலைக் கல்வெட்டுக் குறிப்பிடுகின்றது (Paranavitana 2001:42-42).நெலுகல கல்வெட்டிலும் கால்வாய் பற்றிய குறிப்புண்டு (I.C.II.1983:79).

ஆரம்ப காலத்தில் சாதாரண மக்கள் தமது விவசாய நடவடிக்கைகளை மேற்கொள்ளுவதற்கு தேவையான நீரைச் சேமித்து வைக்க சிறிய குளங்களை தாமே அமைத்துக் கொண்டதுடன் அவற்றை தத்தமது தேவைக்காக பயன்படுத்த கால்வாய்களையும் வெட்டிக் கொண்டனர். ஆனால் காலப்போக்கில் அரசியல், பொருளாதார ரீதியாக ஏற்பட்டுக் கொண்ட மாற்றங்கள், அரசன் மற்றும் அதிகாரிகள் பெரிய குளங்களையும், நீண்ட தூரம் நீரைக் கொண்டு செல்லத்தக்க

கால்வாய்களையும் அமைத்தனர். அனுராதபுர அரசர்களால் ஏற்படுத்தப்பட்ட நீர்ப்பாசன நடவடிக்கைகள் பற்றி மகாவம்சம் முதலான இலக்கியங்கள் பல விவரங்களைக் குறிப்பிடுகின்றன. பிற்காலத்தில் (கல்வெட்டுக் குறிப்புகளின் படி) கி.பி இரண்டாம் நூற்றாண்டுக்கு பின்னர் அவ்வாறு அமைக்கப்பட்ட பாசன நடவடிக்கைகளுக்கு அரசர்களால் வரி விதிக்கப்பட்டன. அவை அதிகாரிகளால் அறவிடப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

கிழக்கிலங்கையில் ஏறத்தாழ ஒன்பது கல்வெட்டுகளில் குளத்தின் நீரினைப் பயன்படுத்துவதற்காக மக்களிடம் அறவிடப்படுகின்ற வரியானது பௌத்த சங்கத்தின் விகாரைகளுக்கும், பிக்குகளின் தேவைகளை நிறைவேற்றுவதற்குமாக வழங்கப்பட்ட செய்தி கூறப்படுகின்றது. சில சந்தர்ப்பங்களில் இவை முழுமையாக அன்றி குறிப்பிட்டதொரு பகுதியும் தானமளிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.உதாரணமாக ரஜகல கல்வெட்டில் மஜிம அயவின் மகன் செமாவி கு3த்த பவத்த விகாரையின் பிக்கு சங்கத்திற்கு பஹணவிய குளத்தின் வரி வருமானத்தின் ஒரு பங்கையும், பிதணவிய குளத்தின் வரியில் ஒரு பங்கையும் வழங்கியதுடன், மேலதிகமாக இரண்டாம் குளத்தின் நான்கு பங்கினை அவ்விகாரைக்கு வழங்கினான்( I.C.II 2001:113 B).

அரசரால் வழங்கப்படுகின்ற நீர் வரி முதலான வருமானமானது நிரந்தரமானதாக பதிவு செய்யப்படுகின்ற முறைமையும் அக்காலத்தில் காணப்பட்டது. நெலுகல கல்வெட்டில் அமைச்சர் அஹலிய வடமநக அஹலவியின் நீர் வருமானத்தை நிரந்தரமான தானமாக நிர்வாக அலுவலகத்தில் பதிவு செய்து பிரகடணப்படுத்தினான் எனக் குறிப்பிடப்படுகின்றது( I.C.II 1983:79). அதேபோன்று திருகோணமலை நீலப்பணிக்கன்மலைக் கல்வெட்டானது ஹயகரய வாவியின் வருமானத்தில் பத்தில் ஒரு பங்கினை (1/10) கலக வஹணக விகாரைக்கு வழங்கியமை பற்றிக் குறிப்பிடுகின்றது ( I.C.II 2001:160). இலங்கை வரலாற்றில் பௌத்த சங்கமானது பொருளாதார ரீதியாக பலமுடைய அமைப்பாக உருவாக்கம் பெறுவதற்கு இத்தகு நடவடிக்கைகளே பிரதான காரணமாக அமைந்தன.

**விவசாயம்:** விவசாய முறைப் பொருளாதார அமைப்பு குறித்த தடயங்கள் சமகால கல்வெட்டுக்களில் மிக அரிதாகவே காணப்படுகின்றன. எனினும் வயல் நிலங்கள், குளங்கள், நீர் நிலைகள் என்பவை பற்றிய குறிப்புகள் புராதன கால விவசாய சமூகத்தின் இருப்பை வெளிப்படுத்துகின்றது. தொடக்ககாலத்தில் விவசாய நோக்கங்களுக்காக இரண்டுவிதமான முறையில் நிலம் பிரிக்கப்பட்டிருந்தது என்பதை கல்வெட்டுக்கள் எடுத்துக்காட்டுகின்றன. இதில் முதலாவது

பிரிவு நிலத்தின் சாகுபடி செய்யும் நிலப்பரப்பை அடிப்படையாக கொண்டிருந்தது. கல்லென விகாரைக் கல்வெட்டு 'அடகரிகிபூமி' என்ற பதத்தைக் கொண்டுள்ளது. நிலத்தின் பாதியளவு கரிஷா என்பது இதன் பொருளாகும். காணியைப் பிரிக்கும் இரண்டாவது முறை நேரடியாக அவற்றை சிறு நிலத் துண்டங்களாக உடைப்பதாகும். கேகாலை மாவட்டத்திலுள்ள லெனகல குகைக் கல்வெட்டு பத்தக்க என்றழைக்கப்பட்ட பல்வேறு நில ஒதுக்கீடுகள் பற்றி குறிப்பிடுகின்றது. ஈரநெல் சாகுபடி எப்பொழுதும் நெல் வயல்களுடன் சம்மந்தப் பட்டிருந்தது. தொடக்க வரலாற்றுக்கால கல்வெட்டுக்கள் இரு வகைகளைச் சேர்ந்த வயல்கள் குறித்து அடிக்கடி குறிப்பிடுகின்றன. முதலாவது வகையைச் சேர்ந்த வயல் நிலங்கள் கெத்த என்றழைக்கப் பட்டதுடன் அவை பெரிய வயல்வெளிகளாகவும் இருந்து வந்தன. சிறிய வயல்கள் 'கும்புர' என்றழைக்கப்பட்டன (கிறிஸ்ணராஜா 2012). ஆரம்பம் முதலாக குடிமக்களை பொறுத்த வரையில் ஈர நெற்பயிர்ச்செய்கை முறை மிகவும் கவர்ச்சிகரமானதாக இருந்திருக்க முடியும். அது முதன்மை வாய்ந்ததாகவும் ஜனரஞ்சகத் தன்மை கொண்டதாகவும் இருந்து வந்தது. நிலங்கள் இரு மழைக் காலங்களில் பயிர்ச்செய்கை மேற்கொள்ளத் தக்கதாக காணப்பட்டுள்ளமை பற்றிய விடயம் காயன்குடா கல்வெட்டில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அரசர், இளவரசர், இளவரசிகள் முதலானோர் சங்கங்களுக்கு நிலதானம் வழங்குகின்ற போது, சில சந்தர்ப்பங்களில் அந்நிலத்தில் பெறப்பட்ட வரி, மற்றும் உற்பத்தியின் மூலமாகக் கிடைத்த வருமானம் என்பன தானமளிக்கப்பட்டன. அரச குடும்பத்தவர்கள் அதிகளவு வருமானத்தைப் பெறுமளவிற்கு அவர்களுக்கு அதிக நிலங்கள் காணப்பட்டமை இதனூடாகப் புலனாகின்றது. ஆயினும் அந்நிலங்களில் எவ்வாறு பயிர்ச்செய்கைகள் நடைபெற்றன என்பதை விளக்கும் குறிப்புகள் அவற்றிலில்லை. பயிர்ச்செய்கையில் இக்காலத்தில் இராஜகாரிய முறை பின்பற்றப்பட்டதா என்பது தெளிவில்லை.

கிழக்கிலங்கையில் தீகவாபியானது புராதன ரோகண அரசின் நெல் உற்பத்தித்தானமாக விளங்கியமை பற்றி மகாவம்சம் எடுத்துரைக்கின்றது (M.V: XXIV:58). ஆரம்பத்தில் கதிர்காமச் சத்திரியர்கள் முதலான எதிரிகளிடம் இருந்து மகாகமவைப் பாதுகாப்பதற்காக தீகவாபியில் இராணுவத்துக்குப் பொறுப்பாக சத்தாதீஸ இளவரசனும் நியமிக்கப்பட்டிருந்தான். ஆனால் பிற்காலத்தில் இப்பிரதேசம் இராணுவத்தளம் என்றவகையில் முக்கியம் பெறாது உணவு உற்பத்திக்கு பெயர்பெற்ற இடமாகக் காணப்பட்டது.

நாட்டின் உட்பகுதிகளில் வாழ்ந்து வந்த சமூகங்கள் ஏனைய விவசாய நடவடிக்கைகளுக்கு இணையான விதத்தில் கால்நடை வளர்ப்பிலும்

ஈடுபட்டிருத்தல் கூடும். எனினும் அக்காலகட்டத்தில் எத்தகைய விலங்குகள் வளர்க்கப்பட்டு வந்தன என்பதை அனுமானித்துக் கொள்வதற்கு கல்வெட்டுக்களிலிருந்து போதிய சான்றுகள் கிடைக்கவில்லை. எனினும் விவசாயிகள் வளர்த்து வந்த பிராணிகளில் பசு முதலிடத்தை பெற்றிருந்தது என நியாயமாகவே நாம் கருதிக்கொள்ள முடியும். அநுராதபுர மாவட்டத்தில் அவுக்கண என்ற இடத்தில் கண்டுபிடிக்கப்பட்ட ஒரு குகைக்கல்வெட்டு புல்வெளி, மேய்ச்சல் நிலம் போன்ற பொருள்தரும் தணபூமி என்ற பதத்தைக் கொண்டுள்ளது. இந்த மேய்ச்சல் நிலங்கள் அநேகமாக கால்நடை வளர்ப்புக்காக உபயோகிக்கப்பட்டிருக்க முடியும் (கிறிஸ்ணராஜா 2012:366).

கிழக்கிலங்கையில் புராதன காலத்தில்; விவசாயம் நடைபெற்றமைக்கு அப்பிராந்தியத்தில் கிடைத்துள்ள பிராமிக் கல்வெட்டுக்கள் சிறந்த சான்றாகும். எனினும் ஆரம்ப காலநீர்ப்பாசனத்துடனான விவசாய நடவடிக்கைகளில் பௌத்த சமய சங்கத்தாரின் செல்வாக்குக் காணப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

**உசாத்துணை**


1. கிருஷ்ணராஜா. செ., 2012, இலங்கைப் பண்பாட்டுப் பரிணாமத்தின்அடிப்படைகள் (கி.பி 1500 ஆண்டுகள்), கொழும்பு.
2. கிருஷ்ணராஜா. செ., 2001, பண்டைய இலங்கையில் தமிழும் தமிழரும் (பிராமிக் கல்வெட்டுக்களை அடிப்படையாகக் கொண்ட ஆய்வு), கொழும்பு தமிழ்ச் சங்கம்.
3. புஷ்பரட்ணம். ப., 2001, பண்டைய இலங்கையில் தமிழும் தமிழரும் (பிராமிக் கல்வெட்டுக்களை அடிப்படையாகக் கொண்ட ஆய்வு), கொழும்பு தமிழ்ச் சங்கம்.
4. **THE MAHAVAMSA, 1986,** Wilhelm Geiger[E.d], Asian EducationalServices - New Delhi, Madras.
5. Paranavitana.S., 1959, **University Ceylon of History of Ceylon -Vol.I, part 1**, Colombo.
6. Paranavitana.S.,1970,**Inscriptions of Ceylon: Early Brahmi Inscriptions**, The Department Of Archaeology Ceylon, Colombo.
7. Paranavitana.S., 1983, **Inscriptions of Ceylon: Late Brahmi Inscriptions**,The Department Of Archaeology Sri Lanka,Moratuwa,II[1].
8. Paranavitana.S., Ed.Malini Dias, 2001, **Inscriptions of Ceylon:Late Brahmi Inscriptions-Vol II, Part II**,Archaeological Survey Department, Sri Lanka.


* * * * *